பல்கலைக்கழத்திற்கு தகுதிபறெும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் கட்டாய இராணுவ பயற்சியின்போது லஹிரு சந்தருவன் என்ற பல்கலைக்கழக மாணவர் உயிரிழந்துள்ளார். அடுத்த பலி உங்கள் பிள்ளையாகவும் இருக்கலாமனெ அனதைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் எச்சரிக்கிறது. ஆகவே இதற்கு எதிராக ஓட்டுமொத்த சமுதாயமும் அணிதிரள வணேடுமனெ ஒன்றியத்தின் ஓருங்கிணைப்பாளர் சஞ்சீவ பண்டார வளெியிட்டுள்ள அறிக்கயில் கூறிப்படப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:

"பல்கலைக்கழக மாணவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் கட்டாய இராணுவப் பயிற்சியின்போது ஏற்பட்ட உபாதை காரணமாக இன்னொரு மாணவர் பலியாகியுள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் நொச்சியாகம, வித்யாதர்ஷி வித்தியாலயத்தில் வர்த்தகப் பிரிவில் உயர்தரம் படித்தும் யாழ்.பல்லகை் கழகத்திற்கு தரெிவுசயெ்யப்பட்ட கன்னொரு இராணுவ மும்காமில் பயிற்சி பறெ்றுக் கொண்டிருந்த லஹிரு சந்தருவன் விஜரேத்ன என்ன மாணவராகும்.

உடற்பயிற்சி சயெ்விக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது ஏற்பட்ட உபாதை காரணமாக கடந்த ஜனவரி 26ம் திகதி ஓர் இராணுவ அதிகாரியால் பரோதனை வதை்தியசாலயைில் சரே்க்கப்பட்டு பின்னர் அவசர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டு சிகிச்சயைளிக்கப்பட்டுள்ளது. கிடகை்கும் நம்பிக்கயைான தகவல்களிலிருந்து அவரது உதரவிதானம் (மார்பு வயிற்றிற்கிடயைிலான மனெ் தகடு) பாதிக்கப்பட்டதால் ஹர்னியா நிலை உக்கிரமடநை்து நுரயீ ரல் பகுதிக்கு ஏற்பட்ட அழுத்தம் காரணமாக இதயம் சயெலிழந்தமயைால் மரணம் சம்பவித்துள்ளது.

இந்த மாணவர் சில காலமாக ஹர்னியா நோயினால் பாதிக்கப்பட்டவராக இருந்துள்ளார். அதனகை் கவனியாமல் அவரை கட்டாய உடற்பயிற்சியில் ஈடுபடுத்தியமயைினால் அவர் மரணித்துள்ளார். அரசாங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் இந்த கட்டாய இராணுவப் பயிற்சிக்கு பலி கொடுக்கப்பட்ட இரண்டாவது மாணவர் இவராகும். இப்படியான பயிற்சியின் காரணமாக வளெிமடயைசை் சரே்ந்த நிஷானி மதுஷானி என்ற மாணவி பயிற்சியின்போது சுகவீ னமடநை்து பதுளை வதை்தியசாலயைில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணமடநை்தார். மலேும் பல மாணவர்கள் அங்கவீ னமடநை்துள்ளனர். இது சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினரொருவரின் களே்விக்கு பதிலளித்த உயர் கல்வி அமசை்சர் அவ்வாறு அங்கவீ னமடநை்தவர்கள்

500பேர்கள் அதிகமாகுமெனக் கூறினார். தவிரவும், ரன்டமெ்பே இராணுவ முகாமில் வதைத்து சீ துவை பஞ்ஞானந்த வித்தியாலயத்தின் அதிபராக இருந்த டப்.ஏ.எஸ்.விக்ரமசிங்க என்பவரும் மரணமடைந்தார். இது மிகவும் பயங்கர நிலமையாக இருப்பதோடு, அரசாங்க இராணுவமயத்தின் அடுத்த பலிக்கடா யாராக இருக்கும் என்ற நிலை உருவாகியுள்ளது. சமூகம் என்ற வகையில நாங்கள் அனவைரும் இந்த நிலமையை தோற்கடிப்பதற்கு அணிதிரள வேண்டும். இல்லையாயின் அடுத்த பலிக்கடா நீ ங்களாக அல்லது உங்கள் பிள்ளையாக இருக்கலாம்.

அரசாங்கம் மாணவர்களை கட்டாயப்படுத்தி தனக்கு அடிபணிய வபைப்பதற்காகவே இப்படியான பயிற்சிகளை நடத்துகின்றது. பல்லகை் கழக மாணவர்கள் மட்டுமல்ல விரிவுரையாளர்கள் உட்பட வகெுஜன சயெற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் இதனை எதிர்க்கும் நிலையிலும் மாணவர்களை அடக்குவதற்கான ஓரு நடவடிக்கையாகவே இந்த பயிற்சி தொடர்ந்து வழங்கப்படுகிறது. மாணவர்கள் பல்கலகை்கழகங்களுக்கு தரிவு சயெ்யப்பட்ட நிமிடத்திலிருந்து மரண பயத்தொடு இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இராணுவப் பயிற்சியின் வாயிலாகவும், அதன் பின்னர் பல்லகை்கழகத்தில் காலடி எடுத்துவதைத் நிமிடத்திலிருந்தும் வகுப்புத் தடை, மாணவர் தன்மயை இரத்துச் சயெ்தல், மஹபொல பூலமபை் பரிசில் வடெ்டப்படுதல் பேனை்றவற்றால் மட்டுமல்ல, வீ டுகளில் மறே்கொள்ளப்படும் இராணுவ தலையீ டுகள், கடத்தல் மற்றும் கொலை சயெ்தல் வரை நிலமைை மோசமாக உள்ளது. இந்த நிலை கடந்த காலங்களில் மாணவர்களுக்கு மாத்திரமல்ல ஊடகவியலாளர்கள், சமூக சயெற்பாட்டாளர்கள், அரசியல் சயெற்பாட்டாளர்கள் வரை வியாபித்திருந்தது. ஆகவே, இச்சந்தர்ப்பத்தில் பேோலி இராணுவ பயிற்சிக்கும், ஓட்டுமொத்த அடக்குமுறை சயெற்பாட்பிற்கும் எதிராக அனவைரும் அணிதிரள வேண்டும்.

-அனதைத்து பல்கலகை் கழக மாணவர் ஒன்றியம